**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 114/2020 |
| Name | : Lakshmanan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கத்தில் வசிக்கிறேன். தேங்காய் வெட்டும் வேலை செய்கிறேன். 21.11.2015 ம் தேதி காலை சுமார் 08.00 மணி அளவில் எனது அண்ணன் ராமன் மற்றும் திருமூர்த்தியுடன் மூவரும் Splendor இருசக்கர வாகனத்தில் கொமரலிங்த்தில் இருந்து தளிக்கு தேங்காய் வெட்டுவதற்காக சென்றோம் செல்லும் வழியில் எலையமுத்தூரில் நாங்கள் கிழக்கில் இருந்து மூன்று பேரும் சென்று கொண்டிருந்தோம் எங்கள் மீது மோதிய Splendor இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் மேற்கிலிருந்து வந்து இண்டிகேட்டர் போடாமல் வந்து எங்கள் மீது விட்டுவிட்டார்கள். நாங்கள் மூன்று பேரும் கீழே விழுந்துவிட்டோம். எனது அண்ணனுக்கு தாடை அங்கேயே உடைந்துவிட்டது. எனது வலது பக்க தோள் பட்டையில் அடிபட்டு தற்போது வரை வலி உள்ளது. திருமூர்த்திக்கு சுயநினைவு இல்லை. அடிபட்ட இருவரையும் நான் சாலை ஓரத்திற்கு இழுத்து வந்தேன். ஆம்புலன்ஸ் மூலம் மூவரும் உடுமலை அரசு மருத்துவமனைக்கு

சென்றோம். எனது அண்ணனை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் பகல் 12.00 மணி அளவில் அவர் இறந்துவிட்டதாக எனக்கு சுயநினைவு வந்த உடன் சொன்னார்கள். நான் மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நாங்கள் வேலைக்கு வழக்கமாக காலை சுமார் 08.00 மணியளவில் செல்வோம். இறந்து போன நபர் எனக்கு உடன் பிறந்த அண்ணன். நான், ராமன், திருமூர்த்தி மூவரும் ஒரே வேலையை தான் செய்து வருகிறோம். தேங்காயை சல்லையை வைத்து தான் போடுவோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நாங்கள் மூவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். ரோட்டின் மையப்குதிக்கு வடபுறம் விபத்து ஏற்பட்டது அவர்கள் இடது புறம் வந்தார்கள் நாங்கள் வலது புறம் சென்றோம். நாங்கள் சென்ற வாகனம் அவர்கள் சென்ற வாகனத்தின் எந்த பகுதியில் மோதியது என்றால் நாங்கள் சென்று கொண்டிருக்கும் போது அவர் இண்டிகேட்டர் போடாமல் வந்து திரும்பி சாலை மத்தியில் மோதி நாங்கள் வலது புறமும் அவர்கள் இடது புறமும் விழுந்துவிட்டார்கள்.

(2) நான் இருசக்கர வாகனத்தில் கடைசியாக அமர்ந்திருந்தேன். கடைசியாக அமர்ந்திருந்ததால் எதிரே வரும் வாகனத்தை துல்லியமாக பார்க்க இயலாது என்றால் சரிதான் ஓரளவு பார்க்கலாம். சம்பவ இடத்திற்கு 5 அடி மேற்கே வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் என்னை யார் சேர்த்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதன் பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பொதுவாக இருசக்கர வாகனத்தில் இரு நபர்கள் தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மூன்று பேரும் தலை கவசம் அணியவில்லை. எதிரில் வாகனம் ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. அந்த வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி தனது சரியாக திசையில் மிதமான வேகத்தில் வந்தார் என்றும் நாங்கள் சல்லையை கொண்டு சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நாங்கள் சல்லை கொண்டு போகவில்லை. எனது அண்ணனுக்கு தாடையில் காயம் ஏற்பட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், எலையமுத்தூர் கட் ரோட்டிற்கு

சுமார் 100 மீட்டர் இடைவெளி இருக்குமா என்றால் இருக்காது எனக்கு மீட்டர் அளவு தெரியாது. நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று கொடுக்கப்பட்ட புகாரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:54:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 114/2020 |
| Name | : Thirumoorthi |
| P.W. | : 4 |
| Father Name | : Murugan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் சாமராயப்பட்டியில் வசிக்கிறேன். செங்கல் சேம்பர் வேலை செய்கிறேன். 21.11.2015 ம் தேதி காலை 09.00 மணி அளவில் நான் எனது அண்ணன் ராமன் மற்றும் லட்சுமண் ஆகியோர் Splendor இருசக்கர வாகனத்தில் கொமரலிங்கத்தில் இருந்து தளிக்கு தேங்காய் வெட்டும் வேலைக்கு சென்று கொண்டிருந்தோம் அப்போது எலையமுத்தூர் மேட்டுக் காடு பேருந்து நிறுத்தம் அருகே மேற்கிலிருந்து கிழக்கே வந்த splendor இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் மோதி விபத்து ஏற்பட்டது. நான் இரண்டு மாதங்கள் கோமாவில் இருந்தேன். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. இரண்டு மாதம் கழித்து ராமன் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 21.11.2015 ம் தேதி காலை 09.10 மணியளவில் TN 78 Z 5675 என்ற Hero Honda Splendor இருசக்கர வாகனத்தை ராமன் என்பவர் ஓட்ட லட்சுமணன் மற்றும் நான் பின்னால் அமர்ந்து பழநி – ஆனைமலை ரோட்டில் எலையமுத்தூர் பிரிவு மேட்டுக் காடு நால் ரோடு அருகில் எதிர் திசையில் எதிரி ஜான் பிரெட்ரிக் தன்னுடைய TN 41 Y 4834 என்ற Hero Honda splendor வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சிக்னல் எதுவும் செய்யாமல் வலது பக்கம் திரும்பி நாங்கள் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதில் வாகனத்தில் வந்த மூவருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் விபத்தில் ராமன் இறந்து போனது குறித்து போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:54:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 114/2020

Name : Aananthi

P.W. : 5

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தளியில் வசிக்கிறேன். சத்துணவு அமைப்பாளராக உள்ளேன். எனது கணவர் ராமன் 21.11.2015 ம் தேதி காலை 08.00 மணியளவில் வீட்டில் இருந்து எனது கொழுந்தனார் லட்சுமணனுடன் வேலைக்கு இருசக்கர வாகனத்தில் கிளம்பிச் சென்றார். காலை சுமார் 10.00 மணி அளவில் சரவணன் என்பவர் எனக்கு போன் செய்து விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார். வேலைக்கு கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது எலையமுத்தூர் மேட்டுக் காடு நால் ரோட்டிற்கு அருகில் இரு ஆசிரியர்கள் இருசக்கர வாகனத்தில் இண்டிகேட்டர் போடாமல் சைகை செய்யாமல் வேகமாக திரும்பி மோதிவிட்டதாக சொன்னார்கள். நான் முதலில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றேன் மதியம் சுமார் 12.40 மணி அளவில் எனது கணவர் இறந்துவிட்டார். போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போனவர் எனது கணவர். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக இழப்பீடு பெற்றுவிட்டேன். நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:54:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 114/2020 |
| Name | : | Veeran |
| P.W. | : | 6 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தளியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.5 எனது மகள். 21.11.2015 ம் தேதி காலை 09.00 மணியளவில் வேலை செய்து கொண்டிருந்த போது போன் வந்தது மாலை சுமார் 06.00 மணியளவில் விபத்து நடந்த இடத்திற்கு நானும், வேலன் மகன் திருமூர்த்தியும் சென்றோம். திருமூர்த்தி தற்போது இறந்துவிட்டார். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். திருமூர்த்தி முதலில் கையெழுத்து போட்டார். நான் இரண்டாவதாக போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் காட்டு வேலை செய்கிறேன். சம்பவம் பற்றி திருமூர்த்தி எனக்கு தகவல் சொன்னார். இறந்து போன நபர் எனது மருமகன். நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் இறந்து போன திருமூர்த்தி படித்துச் சொன்னார். கையெழுத்து போட்ட தாளில் ஏற்கனவே எழுதியிருந்ததா என்றால் இல்லை அந்த இடத்தில் தான் அதிகாரிகள் எழுதினார்கள். கையெழுத்து போட்ட தாளில் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் இல்லை பேனாவில் தான் எழுதப்பட்டிருந்தது. என்ன எழுதியிருந்தது என்றால் வரைபடம் வரைந்து பின்பு எழுதினார்கள். இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:54:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்